மக்கள் குரல்
நடுநிலை நாளேடு

**August 22, 2017**



சென்னை ஸ்டெல்லா மேரிஸ் மகளிர் கல்லூரியில் ''மெட்ராஸ் தினம்'' 'நம்ம மெட்ராஸ்' என்ற தலைப்பில் கொண்டாடப்பட்டது. இதனை கவின் கலை துறையின் தலைவர் மார்கரெட் தாமஸ் துவக்கி வைத்தார். இதனையொட்டி ' செக்ரெட் ஹார்ட் ' பள்ளி மாணவர்களுக்கு மெட்ராசிற்கு பெருமை சேர்த்த சிலவற்றை தலைப்பாக கொண்டு ஓவிய போட்டியம், வண்ணம் தீட்டும் போட்டியும் நடைபெற்றது. இதில் சுமார் 80 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவிகள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். மேலும் மாணவிகளுக்கு பழங்கால மெட்ராஸ் குறித்த சில காட்சிகள் திரையிடப்பட்டது. இதனை மாணவிகள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர். இம்மாதம் 28 ம் தேதி வரலாறு மற்றும் சுற்றுலா துறை சார்பில் ''மெட்ராஸ் தினம்'' மேலும் வெகுவிமரிசையாக கொண்டாட திட்டமிட பட்டு அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுவருகிறது.